# தூதுவர் அலிஸ். ஜீ. வெல்ஸ்

## தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரகளுக்கான முதன்மை பிரதி உதவி செயலாளர்

## கொழும்பில் நடைபெற்ற இந்து சமுத்திர மாநாட்டில் ஆற்றிய உரை

## ஒக்டோபர் 11, 2018

மிக முக்கியமான ட்ரக் 1.5 கலந்துரையாடல் தொடர்பில் இதன் ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூற விரும்புகின்றேன். இதில் கலந்துகொண்டிருப்பது தொடர்பில் உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் எமது அர்ப்பணிப்பை ஆழப்படுத்துவது மற்றும் பாதுகாப்பான, அமைதியான எதிர்காலம் என்ற முன்கூட்டிய கூட்டு நோக்கம் என்பவற்றில் அமெரிக்கா பலமாக அடியெடுத்து வைத்துள்ள நிலையில் இன்று அதுபற்றி எனது கருத்துக்களை இரண்டு வித்தியாசமான கோணங்களில் முன்வைக்க விரும்புகிறேன்.

இதில் முதலாவது கடல்சார் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பாக புதிய முதலீடுகளை மேற்கொள்வது. கடல்சார் செயற்பாடுகளை விஸ்தரித்தல், தகவல் பரிமாற்றம் மற்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பு, நிலைப்புத் தன்மை மற்றும் அமைதி ஆகியன உயிர்நாடியாக விளங்கும் கடற்பரப்பு அமைதியாவும், திறந்த தன்மையுடனும் இருப்பதை உறுதிப்படுத்த இந்து சமுத்திர பிராந்தியத்தில் எமது பங்காளர்களுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

தனியார் துறையினரின் பங்களிப்பு மற்றும் வாய்ப்புக்கள் மூலம் நீண்டகால, நிலைத்திருக்கக் கூடிய மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பவற்றைக் கொண்ட தனியார் துறையினரின் பங்களிப்பு மற்றும் வாய்ப்புக்களுக்கு ஆதரவளிப்பதே இரண்டாவது விடயமாகும்.

விடயத்துக்கு மீண்டும் வருவதற்கு முன்னர், அண்மையில் தேசிய தேர்தலை வெற்றிகரமாக நடத்திய இந்து சமுத்திர நாடொன்றான மாலைதீவையும் அங்கீகரிக்க நான் விரும்புகின்றேன். குறிப்பிட்ட தடைகளை எதிர்கொண்ட நிலையிலும் ஆர்வத்துடன் தமது ஜனநாயக உரிமையை நிறைவேற்றியதற்காக மாலைதீவு மக்களை அமெரிக்கா பாராட்டுகிறது. ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட சோலிக்கு பாராட்டைத் தெரிவிப்பதுடன், இந்தப் பிராந்தியத்தில் பகிரப்பட்ட இலக்கை முன்னேற்ற ஜனாதிபதி சோலி மற்றும் அவருடைய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட எமது அரசாங்கம் ஆர்வமாக உள்ளது என்பதையும் வலியுறுத்துகிறேன்.

கடல்சார் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்க அமெரிக்கா எடுத்து கொண்டிருக்கும் நடைமுறை சார்ந்த சில நடவடிக்கைகளை நான் இங்கு குறிப்பிட்டுக் காட்டுகின்றேன். நாடுகள் பாதுகாப்பு சவால்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்களை வினைத்திறனாக முகங்கொடுப்பதற்குத் தேவையான திறன்கள் மற்றும் தகவல் பரிமாற்ற வலையமைப்புக்களை கட்டியெழுப்ப நாம் அண்மையில் வங்காள விரிகுடா முயற்சியை அங்குரார்ப்பணம் செய்திருந்தோம். இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக, இலங்கையின் கரையோர பாதுகாப்பு ராடர் முறைமைக்கு ஒத்துழைப்பளிக்கவும், மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பை உறுதிப்படுத்தத் தேவையான பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்கவும், கடல்சார்ந்த பதில்செயற்பாடு மற்றும் தடுத்தல் என்பவற்றுக்கு 39 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாம் வழங்குகிறோம். இலங்கையின் கடல்சார் திறனை மேலும் முன்னேற்றுவதற்காக ஹை-என்டியூரன்ஸ் கடற்படை கட்டர் கப்பலை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கியிருந்தது.

இதற்கு மேலதிகமாக 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள், பங்களாதேஷின் கரையோர ரேடார் முறையை மேம்படுத்தவும், ரோந்து படகுகளை நவீனமயப்படுத்தி மேம்படுத்தவும், கடல்சார்ந்த பதில்செயற்பாடு மற்றும் தடுத்தல் என்பவற்றுக்கான பயிற்சிகளை வழங்குதல் என்பவற்றை விஸ்தரிப்பதற்கும் உதவியாக இருக்கும்.

இதுபோன்ற ஆற்றல்களை வளர்த்துக்கொள்வதானது சட்டவிரோத, கட்டுப்படுத்தப்படாத மற்றும் அனுமதிக்கப்படாத மீன்பிடி, கடற்கொள்ளை மற்றும் கடத்தல் மற்றும் அதேபோல், ஏனைய வடிவிலான நாடு கடந்த குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கு முக்கிய கருவிகளாக அமையும்.

இந்தப் பிராந்தியத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் எமது பங்குதாரர்களின் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நாம் எமது முயற்சிகளை வடிவமைக்கிறோம்.

உதாரணமாக, இந்தியா முன்மொழிந்துள்ள தகவல் சேர்க்கை மையம் தொடர்பில் நாம் ஆர்வமாகவுள்ளோம். இது பிராந்தியத்தின் பொதுவான கடல்சார் செயற்பாடுகள் தொடர்பில் இடைவெளிகளைக் குறைத்து ஏற்கனவே செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிங்கப்பூர், மடகஸ்கர் மற்றும் பஹ்ரெய்ன் தகவல் சேர்க்கை மையங்களுடன் இணைப்பதற்கு பாலமாக அமையும்.

இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் முத்தரப்பு ரீதியாகவும், அவுஸ்திரேலியாவுடன் நாற்தரப்பு ரீதியாகவும் இணைந்து செயற்படுவதன் மூலம் நாம் கடல்சார் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஆராய்ந்தறிந்து வருகிறோம்.

அதேநேரம், இந்தோ-பசுபிக் நாடுகளுடன் இணைந்து நாம் பல்வேறு மட்டங்களிலான பல்தரப்பு மனிதபிமான உதவி மற்றும் அனர்த்த பதில்வினை செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். இவற்றில் குறிப்பிடக்கூடியவையாக உள்ள மிதக்கும் தயார்ப்படுத்தல் மற்றும் பயிற்சி கூட்டிணைப்பு தொடர்பான வருடாந்த நிகழ்ச்சித்திட்டம் (CARAT), தென்கிழக்கு ஆசிய கூட்டிணைப்பு மற்றும் பயிற்சி (SEACAT) ஆகியன காணப்படுகின்றன. இந்த செயற்பாடுகளில் முறையே 10 மற்றும் ஏழு இந்தோ பசுபிக் நாடுகள் கலந்துகொள்கின்றன.

இந்த கூட்டுப் பயிற்சிகளானது சம்பவங்கள் நிகழும் போது அவற்றுக்கு வினைத்திறனான முறையில் பதில் நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

தற்போது பௌதீக ரீதியான திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு கடல்சார் பாதுகாப்பில் முதலீகள் மேற்கொள்ளப்படுகின்ற அதேநேரம், மக்களுக்கிடையிலான இணைப்புக்களை ஊக்கப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் நாம் அங்கீகரிக்கிறோம். இது சமூகங்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவதற்கான இணைப்புக்களை ஏற்படுத்த உதவுவதுடன், பாதுகாப்பு சவால்களை தீர்க்கவும் ஒத்துழைப்பதாக அமையும்.

இந்தக் காரணங்களுக்காக அமெரிக்கா அண்மையில் இந்தோ-பசுபிக் பாதுகாப்பு கற்கைகளுக்கான திட்டமொன்றையும் அங்குரார்ப்பணம் செய்திருந்தது. பாதுகாப்பு விவகாரத்தில் சிவில் சமூகத்தின் பங்களிப்பை அதிகரிப்பது அதேபோல், பெண்கள் மற்றும் சிறுபான்மை நிபுணர்களை இந்த முக்கியமான கலந்துரையாடலில் உள்வாங்கிக்கொள்வதற்கு உதவுவது இந்த கல்விப் பரிமாற்றுத் திட்டத்தின் நோக்கமாகும்.

தனியார் துறையின் வாய்ப்புக்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றை ஊக்குவிப்பதற்கு எனது அரசாங்கம் எடுத்திருக்கும் முயற்சிகள் பற்றி இனிப்பார்ப்போம். இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் வெளிப்படைத்தன்மையான மற்றும் நிலையான அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கான வளங்களை தனியார் துறை மட்டுமே கொண்டுள்ளது என்ற அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே அமெரிக்காவின் முன்னெடுப்புகள் அமைந்துள்ளன. சந்தைப் பொருளாதாரம், சுதந்திர வர்த்தகம், தனியார்துறை நிதி முதலீட்டுகளுக்கான திறந்த சூழல் என்பனவே இந்தோ-பசுபிக் பொருளாதாரத்தின் இதுவரையான வெற்றிக்குக் காரணமாக அமைந்திருப்பதுடன், இந்தோ-பசுபிக் நாடுகள் தொடர்ந்தும் பொருளாதார வளர்ச்சியின் மையக்கருவாக அமைந்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கான முக்கிய காரணியாகவும் காணப்படுகிறது. இது பற்றியே இந்த மேடையில் கலந்துரையாடப்படுகிறது.

அதனாலேயே ஜுலை மாதம் நடைபெற்ற இந்தோ-பசுபிக் வர்த்தக மாநாட்டில், இப்பிராந்தியத்தில் தனியார் துறையினருக்கான வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்த அமெரிக்க அரசாங்கம் மூன்று புதிய முயற்சிகளை வடிவமைத்திருப்பதாக இராஜாங்கச் செயலாளர் பொம்பேயோ அறிவித்திருந்தார். இந்த முன்னெடுப்புகளானது உட்கட்டமைப்பு, டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் எரிசக்தி ஆகிய துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தும்.

அதேபோல், இந்த வாரம் ஜனாதிபதி ட்ரம்பினால் கைச்சாத்திடப்பட்ட BUILD சட்டம் தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். BUILD சட்டத்தின் கீழ் தொழில்முனைவர்களை ஆளுமைப்படுத்தி, வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, கூட்டாண்மை நாடுகளில் வறுமையை குறைப்பதற்கு நவீனமயமான அமெரிக்க அபிவிருத்தி நிதி நிறுவனமொன்று அமைக்கப்படவுள்ளது. BUILD சட்டத்தின் கீழ் புதிய அமெரிக்க அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் 60 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனளிக்கும் எல்லையாக கொண்டிருக்கும். இது அதனது முன்னைய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த தொகையின் இரு மடங்காகும். முக்கியமாக புதிய அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனமானது வெளிநாடுகளில் சமத்துவ முதலீடுகளை மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் என்பதுடன், அதேபோல், புதிய முதலீட்டு வாய்ப்புக்களை வினைத்திறனான முறையில் அடையாளம் காண்பதற்கு சாத்தியக்கூற்று ஆய்வுகளையும் மேற்கொள்ளும். இது கடன்கள் மற்றும் அரசியல் ஆபத்துக்கான காப்புறுதிகளை தொடர்ச்சியாக வழங்கும்.

பிராந்தியத்தில் சாத்தியமான வர்த்தகத் திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு நிதியளிப்பதற்கான திறனை அமெரிக்க அரசாங்கம் அதிகரித்தாலும் கூட, நாடுகள் தமது உள்ளூர் வர்த்தக சூழலை முன்னேற்றுவதற்கும் USAID, திறைசேரி மற்றும் வர்த்தக திணைக்களம், வர்த்தக சம்மேளனங்கள் மற்றும் கைத்தொழில் குழுமங்களுடனான கூட்டாண்மை ஊடாக நாம் ஒத்துழைப்பு வழங்குகிறோம் என்பதை அழுத்திக் கூற விரும்புகின்றேன். வர்த்தகங்களை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டு முதலீடுகளை மட்டுமல்லாது வெளிநாட்டு முதலீடுகளையும் கவர்வதற்கும் அத்தியாவசியமான வர்த்தக சூழல்கள் உருவாக்கவும் நாம் நாடுகளுக்கு உதவுகிறோம்.

இந்த பிராந்தியதிலுள்ள எம்மைப் போன்ற பங்காளர்களுடனும் நாம் நெருங்கி பணியாற்றி வருகிறோம். உதாரணமாக, ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் பிரதமர் அபே ஆகியோர் பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் முன்னெடுக்கப்படவுள்ள கூட்டிணைந்த பல்வேறு இருதரப்புத் திட்டங்கள் பற்றி அண்மையில் அறிவித்தனர். சைபர் பாதுகாப்பு, பாதுகாப்புக்கான உட்கட்டமைப்பு போன்ற விடயங்களில் நாம் ஆசியான் நாடுகளுடன் பங்கான்மையைப் பேணி வருகின்றோம்.

இரு தொகுதி முயற்சிகள் தொடர்பில் நான் விளக்கியிருந்தேன். கடல்சார் பாதுகாப்பை முன்னேற்றுவதில் கவனம் செலுத்துவது மற்றும் முதலீடு, வளர்ச்சியை ஊக்குவிக்க தனியார்துறையினருக்கு சக்தியளிப்பது என்தே அந்த இரு விடயங்களாகும். இந்த நிலையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பெறுமதியான பங்காளராக இருப்பதிலும், இந்தோ-பசுபிக் மூலோபாயத்தின் முதுகெலும்பாக இருப்பதிலும் அமெரிக்காவின் அர்ப்பணிப்பு தொடரும்.

எனினும், நாம் அனைவரும் எதிர்கொள்ளும் பாரிய சாவல்களை கோடிட்டுக் காட்டுகின்றேன். பிராந்தியங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பலப்படுத்துவது இங்கு அத்தியாவசியமாகும். உலகத்தின் சனத்தொகையில் அரைப்பங்கையும், அதன் பொருளாதார உற்பத்தியில் நான்கில் ஒரு பகுதியையும் கொண்டிருப்பதுடன், வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களையும் கொண்டுள்ள இந்தோ-பசுபிக் பிராந்தியாமானது உண்மையில் உலகின் மிகவும் சக்திவாய்ந்த பிராந்தியமாக இருக்கிறது. எனினும், இந்து சமுத்திர பிராந்தியமே உலகத்தில் மிகவும் குறைவான தொடர்புகளைக் கொண்ட பிராந்தியமாகும். உலக வங்கியின் தகவல்களுக்கு அமைய, தெற்காசியாவின் பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தகமானது பிராந்தியத்தின் மொத்த வர்த்தகத்தில் ஐந்து வீதத்திலும் குறைவானதாகும். ஒப்பிடுகையில் ஆசியான் நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 25 வீதமாகவும், ஐரோப்பிய ஒன்றியநாடுகளுக்கிடையிலான வர்த்தகம் 60வீதமாகவும் காணப்படுகின்றன. இந்தியா தனது அயல்நாடுகளுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதைவிட பிரேஸிலுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவது செலவு குறைவானது. மோசமான வர்த்தக மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு, எல்லைதாண்டியவ வர்த்தகத்துக்கான ஒழுங்குமுறைகள் கடினமாக இருப்பது என்பனவே இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கிடையிலான வர்த்தக செயற்பாடுகளுக்கான கட்டுப்பாட்டுக்குக் காரணங்களாகும்.

கட்டுப்பாடுகளை நீக்குவது மற்றும் சுங்க விதிமுறைகளை ஒழுங்கமைப்பதன் மூலம் தெற்காசியவில் பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தகத்தை நான்கு மடங்காக அதாவது 28 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 100 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்க முடியும் என உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

நான் இன்று குறிப்பிட்ட சில முன்னெடுப்புகளானது சிறந்த கடல்சார் ஒத்துழைப்புக்கு உதவுதல், முதலீட்டு உட்கட்டமைப்புக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், எல்லைகளை கடந்து செல்லக் கூடிய டிஜிட்டல் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், எரிசக்தி சந்தையை தொடர்புபடுத்தல் ஆகியவற்றின் மூலம் உதவியாக அமையக்கூடும்.

எனினும், மேலும் பல விடயங்கள் செய்யப்பட வேண்டும் என்பது தெளிவாக உள்ளது. இந்து சமுத்திரத்தில் எமது எதிர்காலத்தை வரையறுக்க நாம் எதிர்பார்ப்பதால் இந்த மாநாட்டில் கலந்துரையாடல்களைத் தொடர்வதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். இந்தோ-பசுபிக்கில் பாரிய பகுதியான இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் சுதந்திரம் மற்றும் திறந்த தன்மையை உறுதிப்படுத்த அமெரிக்க அதிக அர்ப்பணிப்புடன் இருந்ததில்லை. ஒவ்வொரு நாடும் ‘‘பலமான, வளமான சுய-சார்புள்ள’’ நாடுகாளக இருக்க வேண்டும் என்ற ஜனாதிபதி ட்ரம்பின் கருத்தை எதிரெலாலிக்கும் வகையில் இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை உருவாக்க கூட்டாண்மை நாடுகளுடன் இணைந்து செயற்படக் கிடைத்த வாய்ப்பை நாம் வரவேற்கின்றோம்.

மிக்க நன்றி